‘சமூக மேம்பாட்டுப் பிரிவின்’ புத்தாண்டுச் செய்தி -

**ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி - புளொட்**

**Democratic People’s Liberation Front - PLOTE**

# சமூக மேம்பாட்டுப் பிரிவு

**அறிவுபூர்வமான, ஆரோக்கியமான, வளமான சமூகத்திற்காக....**

**கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம், பொருளாதாரம் ஆகிய துறைகளின் மேம்பாட்டுக்காக சர்வதேச, உள்ளூர் உறவுகள், நலன்விரும்பிகளின் தன்னார்வ செயற்திட்டம்**

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) இன் பத்தாவது பொதுச்சபைக் கூட்டத் தீர்மானத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சமூக மேம்பாட்டுப் பிரிவு, கழகத்தின் அனைத்து உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் தனது புத்தாண்டு வாழ்த்துகளை பகிர்ந்து கொள்கிறது.

குறுகிய காலத்தில், இயன்றவரையிலும், சமத்துவமான முறையில், வெளிப்படைத்தன்மையுடன், குறிப்பிடத்தக்க அளவில் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்த முடிந்தமைக்கு கழக உறுப்பினர்கள், ஆதரவாளர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய ஆதரவு மட்டுமே காரணமாகும். குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் கழக உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களின் பங்களிப்பு மெச்சத்தக்கது.

தமது இல்லங்களில் நடைபெறும் இனிமையான நிகழ்வுகளுக்கு செலவு செய்யும் நிதியில் குறிப்பிட்டளவு பங்கினை, தாயகத்தில் நலிவுற்றிருக்கும் உறவுகளுக்கு வழங்க வேண்டும் எனும் மன உணர்வின் வெளிப்பாடே பெறுமதிமிக்க பங்களிப்பின் அடிப்படையாக அமைந்துள்ளது.

நாம் தெரிவுசெய்யும் செயற்திட்டங்களை விட அதிகளவு செயற்திட்டங்கள் உதவி வழங்குனர்களின் விருப்பத்தின் பேரிலேயே நிறைவேறுகின்றன. நலிவுற்றவர்களுக்கான உதவிகளை எவ் வழியிலேனும் பெற்று வழங்க வேண்டும் என்பதே எமது பிரதான நோக்கமாக அமைகின்றது.

கல்வி, மருத்துவம், வாழ்வாதாரம், போசாக்கு ஆகிய துறைகளில் சமூக மேம்பாட்டுப் பிரிவு மேற்கொண்ட செயற்பாடுகள் யாவும் காலத்தின் தேவையாகவும், மிகப் பயனுள்ளதாகவும் அமைந்திருந்தன.

தொடர்ந்தும், எமது உறவுகளிடமிருந்து காத்திரமான பங்களிப்பை எதிர்பார்க்கின்றோம். உங்கள் வீட்டில் இடம்பெறும் இனிய நிகழ்வுகளின் போது தாயக மக்களின் மீதான கரிசனையும் வெளிப்பட வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

புதிய ஆண்டில், எண்ணங்கள் புதிதாகட்டும், புலத்திற்கும் தளத்திற்குமான உறவுகள் வலிமை பெறட்டும், ஒன்றிணைந்த செயற்பாடுகள் ஆக்கபூர்வமானவையாக அமையட்டும். ஆதரவற்ற மக்களின் துயர் துடைப்பதில் சிறிய பங்களிப்பையேனும் தயக்கமின்றி வழங்குவோம்.

| செயற்திட்டங்கள் | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| கல்வி வளர்ச்சி | 06 | 563,100.00 |
| மருத்துவ உதவி | 03 | 175,000.00 |
| வாழ்வாதாரச் செயற்பாடுகள் | 11 | 550,000.00 |
| போசாக்கு மேம்பாடு | 04 | 150,000.00 |
| மரணச் சடங்கு | 04 | 115,000.00 |
| மொத்தம் | **28** | **1,553,100.00** |

| பயனாளிகள் | தொகை |
|---|---|
| கழகத் தோழர்கள் | 10 |
| மகளிர் அமைப்பு | 10 |
| குடும்பங்கள் | 32 |
| பாடசாலை | 02 |
| மாணவர்கள் (தனித்து) | 03 |
| முன்பள்ளிகள் | 10 |

| பயன் பெற்ற மாவட்டங்கள் **(07 மாவட்டங்கள்)** | பயன்பெற்ற பிரதேசங்கள் **(22 கிராமங்கள்)** |
|---|---|
| அம்பாறை | அக்கரைப்பற்று |
| மட்டக்களப்பு | ஆரையம்பதி |
| முல்லைத்தீவு | கூழாமுறிப்பு,<br>புலிமிச்சைநாதக்குளம், |

| | |
|---|---|
| | பனிக்கங்குளம், கிழவங்குளம்,<br>ஆனந்தபுரம், நாவற்காடு |
| வவுனியா | கூமாங்குளம்,<br>முதலியார்குளம்,<br>வவுனியா |
| மன்னார் | பெரியகுஞ்சுக்குளம்,<br>பெரியமுறிப்பு<br>ஆண்டாங்குளம், எழுத்தூர் |
| கிளிநொச்சி | இத்தாவில், கோணாவில் |
| யாழ்ப்பாணம் | இணுவில், உடுவில்,<br>தாவடி வடக்கு, கொடிகாமம்<br>உரும்பிராய் |

| | |
|---|---|
| செயற்திட்டங்களுக்கு<br>உதவியவர்கள் | பிரித்தானியக் கிளை<br>உறுப்பினர்கள்<br>ஜேர்மன் கிளை உறுப்பினர்கள்<br>அவுஸ்திரேலியா கழக<br>உறுப்பினர்<br>சுவிஸ் கிளை உறுப்பினர்<br>தாயக கழக உறுப்பினர்கள்,<br>ஆதரவாளர்கள் |

- சமூக மேம்பாட்டுப் பிரிவு, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)